# அமிர்தா என்ஜினீயரிங் கல்லூரியில்
# சர்வதேச தொழில் நுட்ப திருவிழா

கோவை, பிப். 19-

கோவை அருகே உள்ள அமிர்தா என்ஜினீயரிங் கல்லூரியில் அனோஹா என்ற சர்வதேச அளவிலான தொழில்நுட்ப திருவிழா நடந்தது. பெங்களூர் தொழில் அதிபர் பரசுராமன் தொடங்கி வைத்தார். வருகிற 20ம்தேதி வரை நடைபெறும் இந்த தொழில்நுட்ப விழாவில் இந்தியா மட்டுமின்றி வெளிநாடுகளில் இருந்தும் 15 ஆயிரம் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

பேராசிரியர் பரமேஸ்வரன், கல்லூரி முதல்வர் சேசங்கம் ராமநாதன், பிரசாந்த் உட்பட பலர் கலந்து கொண்டனர். அமிர்தா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியின் நிர்வாகி சங்கன் ராமநாதன் கூறுகையில், இந்தியா மட்டுமல்லாது, உலக அளவிலான தொழில் நுட்ப மாணவர்களை ஒருங்கிணைத்து அவர்களின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்த ஊக்குவிக்கும் வகையில் செயல்படுவதே அனோஹா வின் நோக்கமாகும் என்றார்.